பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 22 சனிக் கிழமை 06.07.2024 கதிர் 241

# தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் வரிசையில் அடுத்த இடம் சம்பந்தருக்கு

## வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் புகழுரை



தமிழின பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று முயன்ற தமிழ் அரசுத் தந்தை செல்வ நாயகம், தேசியத் தலைவர் பிரபாகரன் வரிசையில் அமரர் சம்பந்தன் ஐயா அவர்களும் பதியப் படுவார். இதேநேரம் இந்த வரிசையில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுகருன் மீது சேறுபூச முயன்ற அச்சுப் பத்திரிகைக்கு எதிராக சட்டத்தரணி மூலம் 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டுள்ளது என்கிற விவரம்தான் நேற்று சமூக ஊடகங்களுக்குப் பரபரப்பான செய்தியாக இருந்தது. உடனடியாக மன்னிப்புக் கேட்கவேண்டும் என்கிற கோரிக்கை அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு 14 நாட்களுக்குள் 300 மில்லியன் இழப்பீடும் கேட்கப்பட்டுள்ளது.

செய்தியை வெளியிட்ட அச்சு ஊடகம், தன்வசப்படுத்தி வைத்திருக்கும், ஆறு திருமுருகன் தலைமையில் இயங்கும் சிவபூமி அறக்கட்டளைக்குத்தானமளிக்கப்பட்ட நிலையில், அதிலிருந்துநிறுவனத்தை வெளியேற்ற அவர் எடுத்துவரும் நடவடிக்கை மீதான குரோதம் காரணமாகவுமே இந்தச் செய்தி ☞ 2

## வேட்பாளரை அறிவிக்க அவரசம் தேவையில்லை

### மகிந்த ராஜபக்ச சொல்கிறார்

ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு தொடர்பில் அவசரப்பட வேண்டியதில்லை என்று பொது ஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ☞ 8

### ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து

## இடையீட்டு மனுக்கள் பலவும் வழக்கில் சேர்ப்பு

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், கலாநிதி. ஹரணி அமரசூரிய, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, எரங்க குணரத்ன ஆகியோரும் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பிக்கமாறு கோரியுள்ள மனுவுக்கு எதிராக இடையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் குறித்த மனுவுக்கு எதிராக இடையீட்டு ☞ 8

## நாட்டுக்கு 8 பில்லியன் டொலர் கடன் நிவாரணம் கிடைத்தது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கடன்மறுசீரமைப்புச் செயற்பாடுகளுடன் இணைந்ததாக இருதரப்புக் கடன் வழங்குநர்களிடமிருந்து 5 பில்லியன்டொலர்கடன்வட்டி நிவாரணம் கிடைக்க இருப்பதோடு வர்த்தகக் கடன் வழங்குநர்களின் இணக்கப்பாட்டின் பிரகாரம் 3 பில்லியன் டொலர் கடன் வெட்டிவிடப்பட இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். இதன் ஊடாக நாட்டுமக்களுக்கு 8 பில்லியன் டொலர் நிவாரணம் கிடைப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

20 இலட்சம் முழுமையான காணி உறுதிகளை வழங்குவதற்கான 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், குருணாகல் மாவட்டத்தில் 73,143 பேருக்குகாணிஉறுதிகள் வழங்கப்படவுள்ளன. அதன்படி நேற்று குருநாகல் வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் 463 பேருக்கு காணி உறுதிகளை அடையாள ரீதியாக வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநாகல் மாவட்டம் நாட்டிற்கு சோறு தரும் விவசாயிகள் வாழும் பகுதியாகும். ஆனால் இன்னும் அவர்களுக்கான நில உரிமை கிடைக்கவில்லை. இன்று இந்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கானோர் சட்டரீதியான காணி உறுதிகள் இன்றி வாழ்கின்றனர். அவர்களுக்கு உரிமையை வழங்குவதற்காகவே உறுமய திட்டத்தை நடைமுறைப் ☞ 8

## ஐ.மக்கள் சக்தி அரசியல்வாதியின் ஆதரவாளரே வழக்கு வைத்தவர்

### இப்படி கதையை திருப்பி விடுகிறார் சமன் ரத்னப்பிரிய

ஐக்கிய மக்கள் சக்தி அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர் ஒருவரே ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்று ஜனாதிபதியின் தொழிற்சங்கபணிப்பாளர் நாயகம்சமன்ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் ☞ 2

## பேச்சு நடத்த இந்தியா வரும்படி அமைச்சர் டக்ளஸுக்கு அழைப்பு

### நேற்று கூட்டத்தில் அவரே தெரிவிப்பு

புதுடில்லிக்கு வருமாறு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெயசங்கரினால் தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடைப்பட்டு இருக்கின்ற இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர்கள் தொடர்பா பேச்சை மீண்டும் முன்னெடுத்து, இந்திய கடற்றொழிலாளர்கள் விவகாரத்தினை ☞ 8

## உரிய திகதியில் தேர்தல் நடக்கும் மகாநாயக்கரிடம் ரணில் உறுதி

உரிய திகதியில் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அதற்காக தேர்தல்கள் ஆணையாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் விடயங்களை விளக்கியதாகவும், இலங்கை ராமன்ய நிகாயவின் மகாநாயக்க வண. மகுலேவே விமல நாயக்க தேரரிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி, எல்விடிகல வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா ராமன்ய மகாநிகாயவின் தலைமையகத்திற்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி, இலங்கை ராமன்ய மகாநிகாயவின் மகாநாயக்க வண. மகுலேவே விமல ☞ 8

## தேர்தலைப் பிற்போடும் முயற்சிதான் உயர் நீதிமன்றில் தாக்கலான வழக்கு

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான முயற்சிதான் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக் காலம் ஐந்து வருடங்களாக இருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. ஆனாலும் பதவிக் காலத்தை முடிவுசெய்யும் படி கேட்டு வழக்குத் ☞ 8

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்க வேண்டும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதன் படி 1,700 ரூபாய் என்கிற நிரந்த சம்பளம் வழங்கப்படவேண்டும். அதற்காகத் தொடர்ந்து போராடுவோம் என மலையகமக்கள்முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ☞ 2

## கெஹலியவின் வங்கிக் கணக்குகளை 3 மாதங்கள் முடக்க நீதிமன்று உத்தரவு

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்பத்தினரின் தனியார் வங்கி கணக்குகள் சிலவற்றை 3 மாதங்களுக்குமுடக்ககொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளதிலகரட்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

காப்புறுதிபத்திரங்கள் சிலவும்முடக்கப்பட்ட ☞ 2

## மறுசீரமைப்பு தொடர்ந்தால் மட்டுமே அபிவிருத்திப் பணி இனிச் சாத்தியம்

### கூறுகின்றார் அமைச்சர் பந்துல குணவர்த்தன

பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தால்மட்டுமே அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க முடியாது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்மற்றும் வெகுசனஊடகஅமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின்நிபந்தனைக்கு அமைவாக இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வெளியிடப்பட்டுள்ளது என்று கருதுவதாகவும் அந்தக் கேள்விக் கடிதம் கூறியிருக்கிறது.

அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தபடி, மாணவிகள் குளிக்கும் வீடியோக்கள் பதிவு என்பது முற்றிலும் பொய் என்றும் செய்தி வெளியான தினத்தில் சிறுவர் இல்லத்தை இழுத்து மூடுமாறு ஆளுநர் உத்தரவுஎதுவும் பிறப்பித்திருக்கவில்லைஎன்றும்கூட கடிதம் தெளிவுபடுத்தியுள்ளது.

பிரச்சினையைபின்கதவால்ஒரு முடிவுக்குக்கொண்டுவருவதற்கான முயற்சிகளும் நடக்கின்றன என்று கேள்வி. 'டீல்'கள் அந்த ஊடகத்தைப் பக்கம் பக்கமாக நின்று உருவாக்கியவர்களுக்கு வழக்கமானதுதான்என்பதால்இந்தப் பிரச்சினைநீதிமன்றப்படியேறாமல் காதும் காதும் வைத்ததுபோன்று அமந்துபோனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இருந்தா-லும் இம்முறை இந்த விடயத்தை இந்து அமைப்புக்களும் இந்து மதப் பெரியவர்களும்கூட கவனத்தில் எடுத்திருப்பதால் பிரச்சினை சமய ரீதியிலான மற்றொரு வடிவத்தை எடுப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகம் இருக்கின்றன.

......................

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தடங்கல் ஏற்படுத்தக்கூடிய வகையிலான வழக்கு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், அதனை ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள்தான் தாக்கல் செய்தனர் என்று ஒரே கல்லில் இரண்டுமாங்காய்கள் அடிப்பதற்கு ஆளும் தரப்பு முயற்சிக்கிறது.

ஒரு மாங்காய் தேர்தலை தடுப்பது மற்றது தேர்தலை தடுத்த பழியை ஐக்கிய மக்கள் சக்தி மீது போடுவது. அதற்காக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ரொஹான் பல்லெவத்த தனிப்பட்ட கட்சி வைத்திருந்தபோது அதன் ஊடாகத் தேர்தலில் போட்டியிட்ட வர்த்தகரே இந்தவழக்கைத்தாக்கல் செய்துள்ளார் என்று ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரய நேற்றுத் தெரிவித்திருந்தார். இதன் மூலம் பழியை ஐக்கிய மக்கள் சக்தியின் மீது தூக்கிப் போட்டார்.

'இந்த வழக்கை தொடுத்த சீ நெனோ என்ற வியாபாரி தேசிய அபிவிருத்தி முன்னணி கட்சியின் தேசிய பட்டியலில் இருக்கும் ஒரு நபர். ரொஹான் பல்லெவத்த அந்தக் கட்சியின் தலைவராவார். ரொஹான் பல்லெவத்த இன்று இருப்பது ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவிலாகும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வெளிநாட்டு கொள்கைகளைத் தயாரிக்கும் தலைவர்தான் ரோஹான் பல்லெவத்த" என்றார் அவர்.

அதாவது ரணில் விக்கிரம சிங்கவுக்கு தேர்தலைக் கண்டு பயன் இல்லை என்றும், எதிர்க் கட்சியினருக்குத்தான் அந்தப் பயம்இருக்கிறது ஆனால் அவர்கள் ரணிலுக்குப் பயம் என்று பொய் சொல்லிவருகிறார்கள்என்றும்புதுக் கதையைக் கட்டியிருக்கிறார் அவர். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உடனடியாகவே இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வழக்கைத் தாக்கல் செய்த சமிந்திர தயான் லெனோவுடன் எந்த தொடர்பும் இல்லை என்று மறுத்துள்ளது.

'சிலர் லெனோவுடன் ஐக்கிய மக்கள் சக்தியைத் தொடர்புபடுத்த முயற்சிக்கின்றனர். எங்களுக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவரை எங்களுடன் இணைக்க முயற்சிப்பவர்கள் வெறுமனே சேறடிக்க முயற்சிக் கிறார்கள்' என கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுஜீவ சேனசிங்க நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல லெனோ தேசிய மக்கள் சக்தியின் (NPP) மூத்த நபரின் உறவினர் என்று மற்றவர்கள் கூறுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

ஆக மொத்தத்தில் வழக்கைப் போட்டவர் யாருக்கு ஆதரவாகப் போட்டார்என்பதைக்கண்டுபிடிப்பது, தமிழ் அரசுக் கட்சியின் வழக்கைப் போட்டவரைக் கண்டுபிடிப்பது போன்றுபெரும்இழுபறியாகத்தான் இருக்கும்போலும்......

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தனிமனித தலைமைத்துவ சகாப்தத்தின் முடிவாகவும் இது இருக்கும் என் நான் கருதுகிறேன்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவையொட்டி அவர் நேற்று விடுத்த இரங்கல் செய்தியிலே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனது இளமைக் காலத்தில் இருந்தே தமிழையும், தமிழ் மண்ணையும் - கலாசாரத்தையும் - இன அடையாளத்தையும் - பண்பாடுகளையும் இறுதி வரை நேசித்து ஓங்கி ஒலித்த - திருமலை தந்த இரா. சம்பந்தன் என்ற தமிழ் தேசிய இனத்தின் போராளியின் குரல் ஓய்ந்துவிட்டது.

இவரின் இன விடுதலை வேட்கையையும்விடுதலைபோராட்ட உணர்வையும்இனங்கண்டதந்தை செல்வநாயகம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இணைத்துக் கொண்டார். இதனை ஒருமுறை தந்தை செல்வா நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது மன நெகிழ்ச்சியோடு என்னுடன் பகிர்ந்து கொண்டமையையும் அவர் தந்தை செல்வாவின் மீது வைத்திருந்த அதீதபற்றையும் நான் பார்த்திருக்கின்றேன்.

இவ்வாறு தந்தை செல்வாவால் தேடி அரசியலுக்கு கொண்டு வரப்பட்டபோது சம்பந்தன் ஐயா திருமலையில் பெரும் வருமானம்ஈட்டும்சட்டத்தரணியாக சட்டத்துறையில் திகழ்ந்தவர். அவ்வாறான வருமானத்தை முழுமையாககைவிட்டே1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.அதனைத்தொடர்ந்து 2001ஆம் ஆண்டிலிருந்து இறுதி வரைதிருமலையின்பாராளுமன்ற பிரதிநிதியாகத்தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் செயல்பட்டு எல்லோரையும் அரவணைத்துச் சென்றவர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப்பொறுத்தவரை2001ஆம் ஆண்டிலிருந்து 2014 வரை அதன் தலைவராகவும் அதன் பின்னர் அதன் பெருந்தலைவராகவும் செயல்பட்டவர். கட்சியில் அவரின் இறுதி வார்த்தைகளுக்கு நாமெல்லோரும்கட்டுப்பட்டேஇயங்கி வந்திருக்கிறோம். கட்சி கூட்டம் எதுவாகினும் நடவடிக்கைகளை கவனிக்காததுபோலக் காட்டி முழுமையாகக் கிரகித்து நிறைவுரை நிகழ்த்தும்போது எல்லோராலும்கூறப்படும்கருத்துகள் ஒவ்வொன்றுக்கும் பதிலளிக்கும் நினைவாற்றல் அற்புதமானது.

ஈழத் தமிழினத்தின் தேசிய அடையாளத்தை நிலை நிறுத்து வதிலும்அதன்தன்மான,தன்னாட்சி உரிமையை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்காதவராகவே சம்பந்தன் ஐயா விளங்கினார். எல்லா நிகழ்வு மாற்றக் காலங்க ளிலும் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன்கூடியஇணைப்பாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியதுடன் அது சாத்தியப்படாது போனால் வெளியக சுயநிர்ணய உரிமையை நாம் பிரயோகிப்போம் எனத் தெளிவாக கூறி வந்தவர்.

இவருடையஆற்றல்,அறிவுடமை, அனுபவம், அரசியல் அணுகுமுறை காரணமாக தெற்கத்திய சிங்களத் தலைவர்களாலும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் மதிக்கப்பட்டவர். அவ்வாறேசர்வதேச மட்டத்திலும் மதிக்கப்பட்டவர். பிற்காலத்தில் அவரின் உடல் நிலை தளர்வடைந்த போதும் அவரின் அற்புதமான நினைவாற்றல் தளரவே இல்லை.

தாம் ஏற்றுக் கொண்ட கொள்கையையும்கருத்துகளையும் எவர்முன்னிலையிலும்மேசையிலே அடித்துக் கூறும் உதாரணத்துக்கு அவர் உதாரணமாக விளங்கினார். இதனாலேயே பல்வேறு உயர் மட்டத்தினரும் அவரை வீடு தேடிச் சென்று சந்தித்தனர். பல்வேறு சூழ்நிலை மாற்றங்களின்போதும் தமிழ்த் தேசியப் பிரச்னைக்கு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டவர்.

தத்தமது காலத்திலேயே தமிழினப் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று முயன்ற தமிழ் அரசுத் தந்தை செல்வநாயகம், தேசியத் தலைவர் பிரபாகரன் வரிசையில் அமரர் சம்பந்தன் ஐயா அவர்களும் பதியப்படுவார். இதேநேரம் இந்த வரிசையில் உள்ள தனிமனித தலைமைத்துவ சகாப்தத்தின் முடிவாகவும் இது இருக்கும் என் நான் கருதுகிறேன்.

இதனைக் கருத்தில்கொண்டே சம்பந்தன் ஐயாவின் காலத்திலாவது இனப் பிரச்னைக்கான தீர்வை நாம் காணவேண்டும்எனஅங்கலாய்த்து பிரார்த்தித்தவர்களில் ஒருவன் என்ற வகையில், அவரின் கால முடிவில் இனி ஒரு தனிமனித தலைமை உருவாகாது என்பதையும் கூட்டுச் செயல்பாடு ஏற்படவேண்டுமெனில் அது ஒரு கூட்டுத் தலைமையே அமையும் என சில காலமாக நான் கூறி வந்திருக்கிறேன்.

சம்பந்தன் ஐயா திருமலை காளி அம்பாளில் மிகத் தீவிர நம்பிக்கை கொண்டஒருவர். அதனாலேயேதாம் சரியெனக் கருதியவற்றை எந்தக் கரவுகளுமின்றிவெளிப்படையாகவே கூறிவந்தவர். 'உள்ளத்தால்பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளன்' எனும் வள்ளுவர் வாக்குக்கு அமையதமக்கு சரியெனப்பட்டதை துணிந்துகூறிஎம்மைவழிநடத்திய பெருந்தகை சம்பந்தன் ஐயா. எம் எல்லோரின் உள்ளங்களில் நினைவு நிலையில் இருப்பார் என்பது திண்ணம்.

ஒருதலைசிறந்த தலைமைக்கு எமதுசிரம்தாழ்த்திய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா அவர் நித்தம் வணங்கும் காளி அம்பாளின் பாதார விந்தத்தில் அமைதி பெற பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது.

## கெஹலியவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொத்துக்களில் அடங்குகின்றன. இவற்றின் பெறுமதி 97 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மனிதப் பாவனைக்கு உதவாத ஈமோகுளோபின் மருந்துகளை போலிஇந்தியநிறுவனத்திடம்இருந்து இறக்குமதிசெய்துசிகிச்சைகளுக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 7 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மறுசீரமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:

கடன்களை மீள்செலுத்த முடியாத நிலை உள்ளடங்கலாக நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்புப் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான பல தசாப்த காலமாக இலங்கை வரவு -செலவுத்திட்டப் பற்றாக்குறையையும், வர்த்தகப் பற்றாக்குறையையும்எதிர்கொண்டுவ ருகின்றது.

அதன் நீட்சியாகக் கடந்த சில வருடங்களாக செலவினங்களை ஈடுசெய்வதற்குப் போதுமான வருமானம் இலங்கையிடம் இருக்கவில்லை. குறிப்பாக அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி, ஏனைய உதவிக் கொடுப்பனவுகள் என்பன உள்ளிட்ட சகல செலவுகளுக்கும் சுமார் 4.4 ட்ரில்லியன் ரூபா செலவிடப்பட்ட அதேவேளை, அப்போது அரசின் வருமானம் 3 ட்ரில்லியன் ரூபாவாகவே காணப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணி யிலேயே 69 இலட்சம் மக்களின் வாக்குகளுடன் ஜனாதிபதியாகத் தெரிவான கோட்டாபய ராஜபக்ச பொருளாதாரத்தை சீரமைப்ப தற்கான ஆலோசனையை சர்வதேச அங்கீகாரமுடைய கட்டமைப்புக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை அமைச்சரவையின் ஊடாக முன்னெடுத்தார். அதன் பிரகாரமே க்ளிஃபோர்ட் சான்ஸ் மற்றும் லிஸார்ட் ஆகிய நிறுவனங்கள்தெரிவுசெய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய தேவை ஏற்பட்டபோது, அதுகுறித்து அமைச்சரவைக்குள் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்பட்டன. அதன் காரணமாக நாணய நிதியத்தை நாடும் செயன்முறை தாமதமடைந்தது. அதனையடுத்து நாடளாவிய ரீதியில் பெரும் மக்கள் எழுச்சி தோற்றம் பெற்று, பேரழிவு இடம்பெற்றதன் பின்னர், சவால் மிகுந்ததொருதருணத்தில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்வந்தார். அவரதுதலைமையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடி, இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதியுதவிச் செயற்திட்டம் தொடர்பில் இறுதிக்கட்ட இணக்கப்பாட்டை எட்டியதன் ஊடாக, தற்போது நாடு மீண்டும் மூச்சுவிட ஆரம்பித் திருக்கின்றது.

இது இவ்வாறிருக்க நாடு வங்குரோத்து நிலையடைந்திருந்த காலப்பகுதியில் சர்வதேசநாடுகளோ அல்லது அமைப்புக்களோ எமக்கு எவ்வித நிதியுதவியையும் வழங்கவில்லை. அதன் காரணமாக உள்நாட்டில் நெடுஞ்சாலைகட்டுமானம்உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க இயலவில்லை. இருப்பினும்தற்போது ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, இலங்கையில் கடந்த காலங்க ளில் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத் துள்ளார்.

ஏற்கனவே உத்தியோகபூர்வ இருதரப்புக் கடன் வழங்குனர் களுடனான கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டைஎட்டுவதில்விசேட ஒத்துழைப்பைவழங்கியஜப்பானின் உதவிகள் கிட்டும் பட்சத்தில், இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். இருப்பினும் அதற்கு நாம் தற்போதைய மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். அவற்றைஇடைநிறுத்தும்பட்சத்தில் மீண்டும் பின்னடைவு நிலைக்குச் சென்றுவிடுவோம் என்றார்.

## ஐ.மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுசெய்தியாளர்களைச்சந்தித்து அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனைவருடங்கள்எனகுறிப்பிட்டு வியாபாரி ஒருவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். அந்த வழங்கில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடமா ஆறு வருடமா என்பது தொடர்பில் தீர்த்துக்கொள்வதே அவரின் நோக்கமாக இருந்துள்ளது. அதேநேரம் தீர்ப்பு வழங்கும்வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவொன்றையும் அவர் கோரி இருக்கிறார். ஆனால் இந்த நடவடிக்கை தேர்தலைப் பிற்போடுவதற்குரணில்விக்ரமசிங்க மேற்கொண்டுள்ளநடவடிக்கைஎன சஜித் பிரேமதாசவும் அநுரகுமார திஸாநாயக்கவும் பிரசாரம் செய்து வருகின்றனர். தேர்தலைப் பிற்போடவேண்டும் என ரணில் விக்ரமசிங்கஎந்தவொருஇடத்திலும் தெரிவித்ததில்லை.

இந்த வழக்கை தொடுத்த சீ நெனோ என்ற வியாபாரி தேசிய அபிவிருத்தி முன்னணி கட்சியின் தேசிய பட்டியலில் இருக்கும் ஒரு நபர். ரோஹான் பல்லெவத்த அந்தக் கட்சியின் தலைவராவார். ராஹொன் பல்லெவத்த இன்று இருப்பது ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவிலாகும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமாசவின் வெளிநாட்டு கொள்கைகளை தயாரிக்கும்தலைவர்தான்ரோஹன பல்லெவத்த. அதனால் இது தொடர்பாக மக்கள் தேடிப்பார்க்க வேண்டும். இதன்மூலம்தேர்தலுக்கு யார் பயம் என்பது தொடர்பாக மக்களால் புரிந்துகொள்ள முடியும்.

ரணில்விக்ரமசிங்கதேர்தலுக்கு பயந்திருப்பதாக மக்கள் மத்தியில் பல்வேறு சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும்ஒக்டோபர் மாதத்துக்குள் தேர்தல் இடம்பெறவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருந்து வருகிறார்.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவீழ்ச்சியடைந்தநாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கைஎடுத்துள்ளார். தற்போது கடன்மறுசீரமைப்புநடவடிக்கையை மேற்கொண்டுள்ளதால், எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் மீண்டும் முன்னெடுக்கப்பட இருக்கின்றன. மக்களுக்கான நிவாரண வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் காரணமாக மக்களின் ஆதரவு அவருக்கு அதிகரித்து வருகின்றன. இதற்கு பயந்தே இவர்கள் ஜனாதிபதிக்கு எதிராக பொய் குற்றச்சாட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

அதிகாரத்துக்குவந்தால்பிணை இல்லாமல் கடன் பெற்றுக்கொள்ள வங்கி அமைப்பதாக அநுரகுமார திஸாநாயக்கதெரிவிக்கிறார். பிணை ஒன்றுஇல்லாமல்கடன்வழங்கினால் மக்கள் கடன் செலுத்தாமல் இருந்துவிடுவார்கள். இதனால்வங்கி கட்டமைப்புவீழ்ந்துவிடுகிறது. வங்கி கட்டமைப்பைபாதுகாத்துக்கொண்டே நாட்டை முன்னெடுத்து செல்ல வேண்டி இருக்கிறது. நாடு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இரா. சம்பந்தன் போன்ற அஹிம்சைவழி தலைவரின் மறைவு நாட்டுக்கு பேரிழப்பு

## 13ஐ அனைத்து கட்சிகளும் ஏற்கவேண்டும் என்கிறார் கரு ஜயசூரிய



தேசிய ஒருமைப்பாட்டுக்கான நமது பொறுப்பைக் கருத்திற்கொள்கையில் சம்பந்தன் போன்ற உன்னத, அகிம்சைவழி தலைவரின் மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும். இவ்வேளையில் நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வை எமது எதிர்கால சந்ததியினரிடம் நாம் ஒப்படைக்கக்கூடாது. மாறாக நாட்டின் அடிப்படை சட்டத்துக்கு மதிப்பளித்து, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பெருந்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் மறைவையொட்டி வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது: -

இலங்கை உருவாக்கிய தலைசிறந்த அரசியல்வாதிகளில் ஒருவரான இரா.சம்பந்தன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று ஒட்டுமொத்த தேசத்திடமிருந்தும் விடைபெறவுள்ளார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள்மீது அபரிமிதமான அன்புடனும், அனைத்து இனங்களும் ஒன்றாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் தொடர்ச்சியாகக் குரலெழுப்பினார்.

சம்பந்தனின் அரசியல் செயற்பாடுகளை அவதானிக்கையில் நாட்டின் மிகமுக்கிய பல அத்தியாயங்களில் அவர் பங்களிப்பு வழங்கியுள்ளார். இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னரான தொடக்க கால தமிழ்த்தேசிய நடவடிக்கைகளிலும், அதன் பின்னரான வட, கிழக்கு மாகாணங்களை மையமாகக்கொண்டு இடம்பெற்ற யுத்தத்துக்கு சூழல் வகுத்த யுகத்திலும், யுத்தம் முடிவடைந்த தற்போதைய காலப்பகுதியிலும் அவரது வகிபாகம் மாண்புடையதாக அமைந்திருந்தது.

வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகமுக்கிய அரசியல் ஒட்டத்துக்குத் தலைமை தாங்கியவரும், இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித்தலைவர் பதவியை வகித்தவருமான சம்பந்தன் தேசத்திடமிருந்து விடைபெறும் இந்நேரத்தில் இலங்கையர்களாகிய நாம் கவனம் செலுத்தவேண்டிய பல முக்கிய விடயங்கள் இருப்பதாக நாம் கருதுகின்றோம்.

பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான போராட்டத்தில் இந்த நாட்டின் அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய தேசிய தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர். ஆனால் சுதந்திரமடைந்த பின்னரான 76 ஆண்டுகளில் நாட்டில் வாழும் இனக்குழுக்களுக்கு இடையில் பரஸ்பர நம்பிக்கையை முழுமையாக உறுதிசெய்யத் தவறிவிட்டோம்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கான நமது பொறுப்பைக் கருத்திற்கொள்கையில் சம்பந்தன் போன்ற உன்னத, அகிம்சைவழி தலைவரை இழந்தது நாட்டுக்குப் பேரிழப்பாகும். ஆனால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் காண்பித்த அர்ப்பணிப்பைப் பாராட்டி, ஒன்றுபட்ட தேசம் தொடர்பான எமது அபிலாஷைகளைக் கைவிடாமல் முன்நோக்கிச் செல்வதன் ஊடாக நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவது நமது பொறுப்பாகும்.

அதன்படி இந்நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வை எமது எதிர்கால சந்ததியினரிடம் நாம் ஒப்படைக்கக்கூடாது. நாட்டின் அடிப்படை சட்டத்துக்கு மதிப்பளித்து, 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் விசேட கவனம்செலுத்தி ஒற்றுமையுடன் இதனை நிறைவேற்றவேண்டும். ஒரு சகாப்தத்தை அடையாளப்படுத்திய இரா.சம்பந்தன் நம்மைவிட்டு விடைபெற்றிருக்கும் இத்தருணத்தில் அதற்காக ஒட்டுமொத்த தேசமும் உறுதிபூணவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## திருமலை கொண்டுசெல்லப்பட்டது தலைவர் சம்பந்தனின் பூதவுடல்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனது பூதவுடல் யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று (வெள்ளிக்கிழமை) விமானம் மூலம் திருகோணமலைக்கு கொண்டுச் செல்லப்பட்டது.

தந்தை செல்வா கலையரங்கில் இருந்து நேற்றுக் காலை கார் மூலம் பலாலி விமான நிலையத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டு அங்கிருந்து திருகோணமலைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டது.




யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனின் பூதவுடலுக்கு வியாழக்கிழமை பலரும் அஞ்சலி செலுத்திய நிலையில் அஞ்சலி நிறைவுக்கு வந்து பூதவுடல் அங்கேயே வைக்கப்பட்டது.

திருகோணமலையில் இரண்டு தினங்கள் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியை நடைபெற்று தகனம் செய்யப்படவுள்ளது.(05)



## சேருவில தங்கநகரில் காணாமல்போன யுவதி பாழடைந்த கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி என்ற 25 வயதான இளம்பெண் காணாமல் போயுள்ளதாக அவரது குடும்பத்தினரால் மூதூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த முதலாம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் கிளிவெட்டியைச் சேர்ந்த இளைஞரிடம் விசாரணை நடத்தியதன் அடிப்படையில் கிளிவெட்டி கிராமத்தின் எல்லைப்புறத்தில் பாழடைந்துபோன கிணறு ஒன்றை தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த யுவதியும், அயல் கிராமமான கிளிவெட்டி கிராமத்தைச் சேர்ந்த இளைஞனும் காதலித்து வந்ததாகவும், கடந்த மே மாதம் யுவதி தன் காதலனுடன் மட்டக்களப்புக்கு சென்று வசித்து வந்ததாகவும் மே மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர், அவருடன் தொடர்பில்லாமல் போயிருந்ததாகவும் அந்த இளைஞன் தலைமறைவாகியுள்ளதாகவும் குடும்பத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


# குழப்பங்கள் நீங்கட்டும்

இலங்கையின் தெரிந்தெடுக்கப்பட்ட புதிய அரசுத் தலைவர் பதவியேற்பதற்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ளன. ஆனால், அதற்கான தேர்தல் நடக்குமா நடக்காதா என்பது தெளிவற்றதாக, குழப்பங்கள் நிறைந்ததாகவே இன்னும் இருக்கின்றது. இது ஆரோக்கியமான ஒரு போக்காக இல்லை. தேர்தலை நடத்துவதில் ஆட்சியாளர்கள் தீர்க்கமான தீவிரமான போக்கை வெளிப்படுத்தாததன் விளைவாக மக்கள் மத்தியிலும் தேர்தல் அரசியல் குறித்த ஆர்வம் மழுங்கிப் போய்க்கொண்டே இருக்கின்றது.

இலங்கை அரசமைப்பின்படி 2024 வைகாசி இறுதியில் புதிய அரசுத் தலைவர் தனது பதவியை ஏற்றாகவேண்டும். அதற்குரியவகையில்தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்டு, பரப்புரைகள் தீவிரப்படுத்தப்பட்டு தேர்தல் களம் சூடுபிடிக்கவேண்டும். அதற்கு முன்னதாக தேர்தல்கள் ஆணைக்குழுவும் தேர்தல்கள் திணைக்களமும் தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்களில் ஆயத்தப் பணிகளில் இந்தக் காலப் பகுதியில் ஈடுபடவேண்டும். அதற்கான உத்தரவுகளை தேர்தல்கள் ஆணைக்குழுவும் தேர்தல்கள் திணைக்களமும் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளன. என்றாலும் தேர்தல் நடக்குமா இல்லையா என்கிற சந்தேகம் காரணமாகப் பணிகள் முழு வீச்சில் அல்லாமல் மந்த கதியிலேயே நகர்கின்றன. ஏற்கனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முழு அளவில் தயாராகிய நிலையில் அது நிறுத்தப்பட்ட அனுபவம் காரணமாக அதிகாரிகள் இப்போது, உறுதிப்படுத்தப்படாத தேர்தலுக்கு மும்முரமாகத் தயாராவது அவசியமானதுதானா என்று கருதுகின்றார்கள்.

இவ்வாறு தேர்தல் தொடர்பான நிச்சயமற்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பது மிக மோசமான ஒரு மக்களாட்சி நிலமையை ஏற்படுத்தப்போகின்றது. இதனைத் தீர்ப்பது அரசுத் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவினதும் ஆளும் தரப்பினரதும் கடமை. இங்கோ ஆளும் தரப்பினரே குட்டையைக் குழப்புவதில் முன்னணியில் இருக்கிறார்கள். தேர்தலை நடத்தாமல் அரசுத் தலைவரதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான மக்கள் கருத்துக்கணிப்பை நடத்தவேண்டும் என்று அரசுத் தலைவரின் கட்சிப் பொதுச் செயலாளர் கூறுகின்றார். தேர்தலை ஒரு வருடத்திற்குத் தள்ளிப்போடவேண்டும் என்று கேட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது, அரசுத் தலைவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளா 6 ஆண்டுகளாக என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவது குறித்து அமைச்சரவையில் ஆராயப்படுகின்றது. இப்படி தேர்தல் நடக்குமா என்பது தொடர்பில் தெளிவற்ற தனங்களே அதிகம் வெளித் தெரிகின்றன.

மக்கள் ஆணை பெற்ற அரசுத் தலைவர் ஒருவர் மக்களால்விரட்டியடிக்கப்பட்டநிலையில், மற்றொருஅரசுத் தலைவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாட்டுக்குச் சரியான தலைமைத்துவத்தைக் கொடுக்கவேண்டிய இந்த நேரத்தில், தேர்தல் நடக்குமா என்கிற குழப்ப நிலையில் நாட்டை வைத்திருந்து நிலமைமைய மேலும் மோசமாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உடனடியாக இந்த நிலை மாற்றப்பட்டு தேர்தல் உறுதியாக இந்தத் தினத்தில் நடத்தப்படும் என்பதை உறுதிப்படுத்த அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# உணர்ச்சிகள் நிரம்பி வழிந்த உலகக் கோப்பை!

எஸ்.ஸ்ரீதுரை

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக்கனியைப் பறிப்பது, சுவைப்பதுஎன்றுகேட்டிருக்கிறோம். ஆடுகள மண்ணைச் சுவைப்பதைக் கேட்டதுண்டா? நடந்து முடிந்த ரி/20 உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதும், இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோஹித் சர்மா, போட்டி நடைபெற்ற




பார்படாஸ் மைதானத்தின் ஆடுகளத்திலிருந்து சிறிதளவு மண்ணை எடுத்துத் தன் வாயிலிட்டுச் சுவைத்தார்!

உண்மையைச் சொல்வதென்றால், ரோஹித் சர்மா மட்டும் உணர்ச்சிவசப்படவில்லை; அன்று அந்த கிரிக்கெட் மைதானத்தில் இருந்த அனைவருமே உணர்ச்சிவயப்பட்டிருந்தனர்.

வென்ற அணியினரும் தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாமல் கண்ணீர் வடித்தனர். கோப்பையை நழுவவிட்ட தென்னாப்பிரிக்க வீரர்கள் சிலரும் தேற்ற முடியாமல் தேம்பியழுதனர்.

உலகக் கிரிக்கெட் கவுன்சில் வெளியிடும் தர வரிசைப் பட்டியலில் பல்வேறு இந்திய வீரர்கள் இடம்பெற்றிருந்த நிலையிலும், இந்திய அணியால் 13 ஆண்டுகாலமாககிரிக்கெட் உலகக்கோப்பைஎதையும் வெல்ல முடியவில்லை. பல காரணங்களினால் சர்வதேசப் போட்டிகளில் பலமுறை இந்திய அணி இறுதிவெற்றிக்கனியைப்பறிக்காமல்தோல்வியடைய நேர்ந்தது.

தற்பொழுது நடந்து முடிந்திருக்கும் ரி/20 ஐசிசி கிரிக்கெட் போட்டிகளின் முதல் சுற்று, சூப்பர்8, அரை இறுதி ஆகிய அனைத்திலும் தொடர்ந்து வெற்றி பெற்ற இந்திய அணி இறுதி ஆட்டத்தில் நுழைந்ததும் அனைவரின் மனங்களிலும் உற்சாகம் இருந்தபோதும், சிறிது எச்சரிக்கையும் இருந்தது.

இந்த முறையாவது வெற்றி கிட்டுமா அல்லது பழைய கதையே தொடருமா? என்ற ஐயத்துடன் கூடிய கேள்வி பலரின் மனதில் தொக்கி நின்றது. அந்த ஐயத்தைக் களைந்து இந்திய அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றியது நாடு முழுவதிலும் பெருமிதத்துடன் கூடிய சந்தோஷ உணர்வைத் தட்டி எழுப்பியது.



இந்திய அணி வெற்றியைச் சுவைத்த அந்த நள்ளிரவு வேளையிலும் இந்தியாவின் பல்வேறு நகரங்களின் தெருக்களிலும் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் கூடிப் பட்டாசு வெடித்து, ஆட்டம் பாட்டங்களுடன்வெற்றியைக்கொண்டாடித்தீர்த்தனர்.

ரசிகர்களின் மனநிலையே இப்படி என்றால், மைதானத்தில் இருந்த வீரர்களின் நிலை எப்படியிருந்திருக்கும்? உணர்ச்சிக் கொந்தளிப்பில் மிதந்திருப்பார்கள்!

போட்டியின் இறுதி ஓவரை மிகவும் திறமையாக வீசி இந்தியாவின் வெற்றிக்கு வழிவகுத்த ஹர்திக் பாண்டியாவின் கன்னத்தில் அணித் தலைவர் ரோஹித் சர்மா முத்தமிட்டுப் பாராட்ட, நீண்ட கால ஏமாற்றங்களுக்கு ஒருவழியாக முற்றுப்புள்ளி வைப்பதற்கு தாமும் ஒரு கருவியாக இருந்ததை எண்ணி பாண்டியா ஆனந்தக் கண்ணீரைப் பொழிய... அந்த இடமே உணர்ச்சிக்கடலில் மிதந்தது.

பாண்டியாவின் கண்ணீருக்கு அது மட்டுமே காரணமாக இருந்திருக்க முடியாது. கடந்த ஐபிஎல் போட்டித்தொடரில் ரோஹித் சர்மாவுக்கு பதிலாக மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டன் பொறுப்பை ஹர்திக் பாண்டியா ஏற்றதை ஜீரணித்துக் கொள்ள முடியாத மும்பை ரசிகர்கள் பலரும் அவர் விளையாடும் மைதானங்களில் கூச்சலிட்டதுடன், அவரைப் பல விதமாக கேலி செய்யும் பரிகாச காணொலிகளையும் வெளியிட்டு வேல் பாய்ச்சிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், ஹர்திக் பாண்டியா ரி/20 உலகக் கோப்பையின் இறுதிக் கணங்களில் ஆக்ரோஷமாக விளையாடி, அணித் தலைவர் ரோஹித் சர்மாவுக்கு முழு உறுதுணையாக இருந்து, கூட்டுப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை ரசிகர்களுக்கு அடிக்கோடிட்டு காட்டினார். வெற்றி உற்சாகத்துக்கு இடையேயும் முன்னர் எதிர்கொண்ட கேலிகளின் நினைவுகள் எழும்பி பாண்டியாவின் கண்கள் நிரம்பியிருக்கலாம்.

கடந்த 2007-ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது. இதில் கோபமடைந்த ராஞ்சி நகர கிரிக்கெட் ரசிகர்கள் இந்திய கிரிக்கெட்டின் கனவுநாயகனாகிய தோனியின் வீட்டையே தாக்கினார்கள் என்கிறபோது, ரோஹித் சர்மாவை விரும்பும் ரசிகர்கள் பாண்டியாவுக்கு எதிராகக் கிளர்ந்தது ஒரு விஷயமே இல்லை. எனினும் இந்த விஷயத்தில் இறுதி வெற்றி பாண்டியாவிற்கே என்றுதான் கூற வேண்டும்.

ரி/20 உலகக் கோப்பைப் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு முதல் முறையாகத் தகுதி பெற்ற தென்னாப்பிரிக்க அணி, ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் வெற்றியைதங்கள்கைக்குள்வசப்படுத்திவிட்டதாகவே தோற்றமளித்தது. தென்னாப்பிரிக்க அணி வீரர்களும் ரசிகர்களும் மிகவும் உற்சாகமாக இருந்தனர்.

பும்ரா, பாண்டியா, அர்ஷ்தீப் சிங் ஆகியோரின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும், பவுண்டரி லைனில் தாவியபடி, சூரியகுமார் யாதவ் பிடித்த அற்புதமான கேட்சும் தென்னாப்பிரிக்காவின் வசம் செல்லவிருந்த வெற்றிக்கனியை திசைமாற்றி ரோஹித் சர்மாவின் மடியில் விழ வைத்துவிட்டன.

தோல்வியைத் தாள முடியாத மில்லர், ரபாடா, டிகாக் உள்ளிட்ட தென்னாப்பிரிக்க வீரர்களின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

இந்தபோட்டியுடன்இளையதலைமுறையினருக்கு வழிவிட்டு விராட் கோலி, ரோஹித் சர்மா, ரவீந்திர ஜடேஜா ஆகிய மூத்த வீரர்கள் சர்வதேச ரி/20 போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தனர். அனுபவஸ்தராகிய பயிற்சியாளர் ராகுல் திராவிட்டின் பதவிக் காலமும் முடிவடைவது இந்திய ரசிகர்களுக்கு மனவலியை அளிக்கும் விஷயமாகும். இவர்களின் பங்களிப்பில்லாத இந்திய ரி/20 அணியை சுலபமாக கற்பனை செய்ய முடியவில்லை.

வாழ்வில் மறக்க முடியாத மிகச் சிறந்த இறுதி ஆட்டத்தை வென்று, ரி/20 உலகக் கோப்பையை ஏந்தி நிற்கும் இந்திய அணியைக் காணும்போது, சிறிது வேதனை கலந்த ஆனந்த உணர்வு ஒவ்வொரு இந்திய கிரிக்கெட் ரசிகரின் உள்ளத்திலும் கடந்து வரும் என்று தோன்றுகிறது.

# மொழிபெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம்



கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெ.ரஜீவன் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தி பெற்று நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்துகொண்டார்.

இவர் ஈ - சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் நிர்வாகியும் சிறந்த சமூகசேவையாளரும் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுமானிப் பட்டத்தையும், களனிய பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் முதுமானிப் பட்டதாரியும் ஆவார்.

இவர் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி திருமதி மேரிமெற்லின் தம்பதியினரின் இரண்டாவது புதல்வர் ஆவார். (05)

# லொறி கவிழ்ந்ததில் பதுளையில் விபத்து

## 4 பேர் சாவு;; 3 பேர் காயம்

பதுளை-சொரணாதோட்டை வீதியில் வெலிஹித்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மொனராகலையில் இருந்து பயணித்த லொறி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் நடுவே கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது லொறியில் பயணித்த நான்கு பேர் உயிரிழந்துள்ள நிலையில் மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பதுளை பொது வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (05)

# இரு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம்: தேரர் வேடமணிந்த சந்தேகநபர் கைது

இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்து தலைமறைவாக இருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர், தேரர் ஒருவரை போன்று வேடமணிந்து அநுராதபுரம் பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

48 வயதுடைய மேலதிக வகுப்பு ஆசிரியரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 14 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்து சுமார் 8 மாத காலமாக தலைமறைவாக இருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# மட்டு. வாகரையில் மழையுடன் மினி சூறாவளி 12 வீடுகள் சேதம்

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிருமிச்சை பிரதேசத்தில் மழையுடனான மினி சூறாவளி காற்றினால் பல முரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் 12 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளதுடன் வீடுகளில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக காயம் ஏதுவுமின்றி உயிர்தப்பிய சம்பவம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக வாகரை பிரதேச செயலாளர் ஏ.அருணன் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினையடுத்து சம்பவதினமான வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் திடீரென மழைபெய்ததுடன் மினி சூறாவளி காற்று வீசியதையடுத்து பிரதேசத்திலுள்ள பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் வீடுகளின் கூரை ஓடுகள், தகரங்கள் என்பன தூக்கி வீசி எறிந்ததையடுத்து ஓடுகள் வீடுகளுக்குள் வீழந்து உடைந்துள்ளன.

இந்த மினி சூறாவளி காற்றால் 12 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளதுடன் எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# சிறுவர்களை பாதுகாப்பாக வளர்ப்பதற்கு ஆதரவாக சமூகசேவை பணிக்குழுவை நிறுவுதல் கலந்தாய்வு!

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் சிஈஆர்ஜ நிறுவனமும் இணைந்து மாற்று பராமரிப்பு பணிக்குழு மற்றும் சிறுவர்களை பாதுகாப்பாக வளர்ப்பதற்கு ஆதரவாக ஒரு சமூக சேவை பணிக்குழுவை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடலொன்று வியாழக்கிழமை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரனின் தலைமையில் இடம்பெற்றது.

சிஈஆர்ஜ நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் வி.தர்ஷன் அவர்களினால் இக்கலந்துரையாடல் பற்றிய அறிமுகம் மற்றும் நோக்கம் என்பன எடுத்து கூறப்பட்டது.

குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள், குழந்தைகளை வலுப்படுத்துவதற்கான தேவைகள், தரவு அடிப்படை மேம்பாடு, முன்னோக்கி செல்லும் வழி பற்றிய திறந்த விவாதம் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி. ஆர். ரிஸ்வாணி, துறை சார்ந்த அதிகாரிகள், துறைசார் சார்ந்த உத்தியோகத்தர்கள், சிஈஆர்ஜ நிறுவனத்தின் அதிகாரிகள் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்




இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கதிர்காம யாத்திரிகர்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள்



(அபு அலா)

கதிர்காம பாதயாத்திரிகர்கள் நலன் கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேசமருத்துவதிணைக்களம்மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம்கள் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் இடம்பெற்றது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் தொணிப் பொருளில் இடம்பெற்ற இந்த இலவச மருத்துவ முகாமின்போது, 2000 பாதயாத்திரிகர்களின் தாக சாந்திக்கான குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டது. இதனை அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் அப்துல் சலாமின் ஒத்துழைப்போடு அவரின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக் கமைவாக, கிழக்கு மாகாண சுகாதார சுதேசமருத்துவஅமைச்சின்செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரின் அறிவுறுத்தல்களின் கீழ் கல்முனை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ பிரதி மாகாண ஆணையாளர்வைத்தியர்எம்.ஏ.நபீலின் மேற்பார்வையில்1000பேருக்கு நோய் எதிர்ப்பாற்றல் மருந்து, (இமியூன் வூஸ்ட்டர்பானம்) உடல்உபாதைகளை நீக்கக்கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுர்வேத மருந்துகளும், பாம் போன்ற பல மருந்துகளும்வழங்கிவைக்கப்பட்டன.

கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் கல்முனை பிராந்திய பணிப்பாளராக கடமையாற்றியவைத்தியர்குணசிங்கம் சுகுணனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த இலவச மருத்துவ நடமாடும் சேவைகளுடன்குளிர்பானங்கள்மற்றும் நோய் எதிர்ப்பாற்றல் மருந்து (இமியூன் வூஸ்ட்டர் பானம்) போன்ற பல தரப்பட்ட மருந்துகள் இன்றுவரை தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த இலவச மருத்துவ முகாமில் ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்று கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கான சிறந்த சேவைகளை வழங்கி வைத்தனர் என்பதும் சிறப்பம்சமாகும். (05)

# கலாநிதி ஆறு.திருமுருகன்மீது அபாண்டமான குற்றச்சாட்டு

## துர்க்காபுரம் மாதர் சங்கம் குற்றச்சாட்டு

தெல்லிப்பழை துர்க்காதேவிஸ்ரீ ஆலயத்தை நேர்த்தியாக வழிநடத்திச் செல்கின்ற எமது தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களைப் பற்றி அபாண்டமானகுற்றச்சாட்டுமுன்வைக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்து தெல்லிப்பழை துர்க்காபுரம் பெண்கள் தொண்டர்சபை வடமாகாண ஆளுநருக்கு அதன் பிரதிநிதிகள் ஒப்;பமிட்டு அறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆன்மீகப் பணிகளோடு சமூகப் பணிகளையும் தன்னகத்தே கொண்டு பரந்துபட்ட பெரு விருட்சமாக சமூகத்தில் அறப்பணிகள் பலவற்றை ஆற்றி வருகின்றது.

துர்க்காதுரந்தரி சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவராக ஆலயத்தில் இருக்கின்ற காலத்தில் இந்த ஆலயம் சமூகமயப் படுத்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டு 'எம் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை நிறுவனத்தின் தலைவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

அதேபோன்று, தாய், தந்தையரை இழந்து தவிக்கும் பெண்பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு துர்க்காதேவி மகளிர் இல்லம் அன்னை அவர்களால் அவர் அதற்கும் தலைவராக இருந்து உருவாக்கப்பட்டது. நீதிமன்றத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்ற தாய் - தந்தை அற்ற பிள்ளைகளைக்கூட, அவர்களின் முறையான பராமரிப்பிற்கும், நன்னடத்தைக்குமாக யாழ்.மாவட்ட நீதிமன்றங்கள்கூட சிபாரிசு செய்கின்ற இடமாக துர்க்காதேவி மகளிர் இல்லம் காணப்படுகின்றது. அந்தளவுக்கு அதற்கு சமூகத்தில் நற்;பெயருண்டு.

யுத்தம் மௌனிக்கப்பட்ட நேரத்தில் தாய், தந்தைகளை இழந்து போர் தந்த வலிகளுடன் வாழவெறுத்துதடுப்புமுகாமில்இருந்தஎத்தனையோ பெண்பிள்ளைகளை எமது ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அழைத்துவந்து எமது மகளிர் இல்லத்தில் ஒப்படைத்தார்.

எமது இல்லத்தில் இருந்து ஒவ்வொருவருடமும் பல்கலைக்கழகங்களுக்கு கணிசமான மாணவர்கள் செல்கின்றனர். இந்த இல்லம் அவர்களுக்கு ஓர் அநாதை இல்லம் என்ற சிந்தனை மனதில் எழாதவாறு ஒவ்வொரு விடயங்களையும் அவர்களது கல்வி நடவடிக்கைகளையும் பார்த்துப் பார்த்து ஆற்றுகின்றது. இன்று இந்த இல்லத்தில் இருந்தவர்கள் எத்தனையோபேர் இல்லற வாழ்வில் தம்மை இணைத்து எமது ஆலயத்தால் அவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டு வாழ்கின்றார்கள்.

அன்னை அவர்கள் மரணித்ததன் பிற்பாடு, தலைவராக கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா நியமிக்கப்பட்டதன் பிற்பாடு, அவர் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபைக்கு தலைவராக ஒரு பெண்ணையும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபராக உள்ள பெண் ஒருவரையும் நியமித்தார். முழுப் பொறுப்புக்களையும் தலைவர்களிடமே ஒப்படைத்தார்.

ஆலயத்தினதும் நிர்வாகசபை மற்றும் தர்மகர்த்தா சபை என்பவற்றின் தலைவராக அவர் உள்ளமையால், அவரை போசகராக நியமித்தோம். ஆனால், வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற ஊடகம் ஒன்று, தாங்கள் உத்தரவிட்டதாகத் தெரிவித்து "ஆறு.திருமுருகனால் நடத்தப்படும் சிறுவர் இல்லம் இழுத்து மூடல்" என பிரதான தலைப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டமையைக் கண்டு அதிர்ச்சியுற்றோம். முதலில் இந்த மகளிர் இல்லத்துக்கு அவர் வெறும் போசகர் மட்டுமே. அத்துடன் இது அவருடைய இல்லம் என்றாற்போல் தெரிவிக்கப்பட்;டுள்ளது. இது அன்னை சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியால் உருவாக்கப்பட்டு, அதற்கொரு தலைவர் நியமிக்கப்பட்டு, நிர்வாக சபை, தர்மகர்த்தா சபை போன்றவற்றின் கண்காணிப்பின் கீழ் 40 வருடங்களுக்கு மேலாகச் செயற்படுகின்ற ஓர் அமைப்பு. இந்த அமைப்பின்மீது இதுவரை இல்லாத அளவுக்கு காழ்;ப்புணர்வு காரணமாக இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மிகவும்புகழ்பூத்த ஆறுமுகநாவலருக்குப் பின் எமது வடக்கைக் காக்கவந்த ஆன்மீகத் தலைவர்மீது, கௌரவ ஆளுநர் ஆகிய தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் எனத் தெரிவித்து, ஊடகத் தர்மத்துக்கு முரணாக அவரது பெயர் பாவிக்கப்பட்டமையை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்றுள்ளது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஐ.மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்குரோத்துஅடைந்தநிலையிலும் ரணில் விக்ரமசிங்க வங்கி கட்டமைப்பைபாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தார்.

அதேபோன்று 42 இலட்சம் மாணவர்களுக்கும் பகல் உணவு வழங்குவதன் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பதை சஜித் பிரேமதாச புரிந்துகொள்ள வேண்டும். அதனால் இவர்கள் இருவருக்கும் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை பல்வேறு துறைகள் தொடர்பில் அறிவுள்ளவர்களுக்கு தெரியும் என்றார்.

## தேர்தலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குத் தாக்கல் செய்வதற்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடவேண்டியுள்ளது. அதற்கான முதலீடுகளைச் செய்யவேண்டும்.

வர்த்தகர் ஒருவர் வழக்கிற்கான முழுமையான செலவுகளையும் பொறுப்பேற்று வழக்க தாககல் செய்வார் என்று கருகின்றீர்களா? ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு இதற்கு முன்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார அதற்கான கருத்துக்களை வெளியிட்டார். அவர் கட்சியின் பொதுச் செயலாஜளர் என்பதால் தலைவருக்குத் தெரியாமல் அவ்விதமான கருத்துக்களை நிச்சயமாகவெளியிட்டிருக்கமாட்டார். அவருகு;கு கட்சித் தலைவரான ஜனாதிபதியின் ஆலோசனை நிச்சயமாக கிடைத்திருக்கும்.

அதன்தொடர்சியாகவேதற்போது போடப்பட்டுள்ள வழக்கினையும் பார்க்க வேண்டியுள்ளது. குறிப்பாக, கூட்டுச்செயற்பாடுகள்தான் மிகவும் அவசியமாக இருக்கின்றன. அதனையே இப்போது வெளிப்படுத்துகிறார்கள் என்றார்.

## நாட்டுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துகிறோம்.

மிகவும் கடினமான காலகட்டதிலேயேஎன்னால்ஆட்சியமைக்க நேரிட்டது. ஆட்சியைப்பொறுப்பேற்க தலைவர்கள் எவரும் அப்போது முன்வரவில்லை. ஆனாலும் நான் ஏற்றுக்கொண்டேன். பலகட்சிகளை ஒன்றிணைத்துக்கொண்டு ஆட்சியமைத்தேன். தற்போது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது மக்கள் நம்பிக்கை இழந்திருந்தனர். இன்று இந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். தமது வீடுகள் தீயிடப்பட்டதை மறந்துவிட்டு மக்களுக்கு நன்மை செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

இன்று நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது. கடனைத் திருப்பிச் செலுத்த எமக்கு 04 வருட கால அவகாசம் உள்ளது. மேலும், சுமார் 06 வருடங்கள் மிதமான சுமையுடன் கடனை செலுத்தும் வாய்ப்பும் கிடைக்கும். செலுத்த வேண்டிய வட்டியில் ஒரு தொகை வெட்டி விடப்பட்டுள்ளது. அதனால் 05 பில்லியன் டொலர்கள் நாட்டுக்கு எஞ்சும்.

தற்போது தனியார் ஒப்பந்ததாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதன்படி சுமார் 03 பில்லியன் டொலர்கள் குறைவடையும். எனவே நாம் செலுத்த வேண்டிய பணத்தில் இருந்து மொத்தம் 08 பில்லியன் டொலர்கள் வெட்டிவிடப்படும். மேலும்,தளர்வானநிபந்தனைகளின் கீழ் 02 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சீனா , இந்தியாவின் உதவித் தொகைகள் அதற்குள் உள்ளடங்காது. இதன் மூலம்கடந்தஇரண்டுவருடங்களில் 08 பில்லியன் டொலர்களை சேமித்துள்ளோம்.

நான் அரசாங்கத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர், ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவின் காலத்தில், இந்தியா எமக்கு மூன்றரை பில்லியன்டொலர்களை இலகு கடன் அடிப்படையில் வழங்கியது. மேலும்பங்களாதேஷம் 200 மில்லியன் டொலர்களை வழங்கியது. பொருளாதாரசிக்கல்கள் இருந்தபோதிலும், நாம் 200 மில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்தியுள்ளோம்.

பொருளாதாரத்தைகட்டியெழுப்ப நான் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. வற் வரியை அதிகரிப்பது எளிதானது அல்ல. ஆனால் பொருளாதாரத்தைசீரமைக்கஅதைச் செய்ய வேண்டியிருந்தது. சில தலைவர்கள்மக்களைவீதிக்குவந்து வீடுகளை எரிக்கச் சொன்னார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கக் கூடாது என்றார்கள்.விவசாயிகளைமீண்டும் கொழும்புக்கு வருமாறு கூறினர். விவாசாயத்துக்கு தேவையான எரிபொருள்இல்லாமல்கொழும்புக்கு வரமுடியாது. மக்களுக்குஎரிபொருள் மற்றும்உரங்களைவழங்கினோம். அப்போதும் கூட விவசாயத்தில் ஈடுபடாமல் விவசாயிகளுக்கு கொழும்புக்கு வருமாறு கூறினர்.

விவசாயிகள் 2022-/2023 வரையில் பெற்றுத்தந்த அறுவடையின் காரணமாகவே இந்தநாட்டின்உற்பத்திஅதிகரித்தது. அதேநேரத்தில், சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடைந்தது. இவற்றுக்கு மத்தியில் 08 பில்லியன் டொலர் நிவாரணத்தையும் பெற்றுக் கொண்டு கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான வழியை உருவாக்கியுள்ளோம். பொருளாதார வீழ்ச்சி சாதாரண மக்களையே பெருளவில் பாதிக்கிறது. ஆனால் பொருளாதார வளர்ச்சியின் இலாபத்தை ஒரு தரப்பு மாத்திரம் அனுபவிக்கிறது.

எதிர்வரும் வருடங்களிலும் சம்பள அதிகரிப்பு குறித்து கவனம் செலுத்தலாம். இத்தோடு தனியார் துறையிலும் சம்பள உயர்வு கிட்டியது. சுற்றுலா துறையின் வருமானம் அதிகரித்தது. இன்று, நாட்டில் ஒரு நவீன சுற்றுலா வணிகம் உருவாகியுள்ளது. இதன் மூலம் மக்களின் வருமானமும் அதிகரித்துள்ளது.

இந்த குருநாகல் மாவட்டம் துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. கம்பஹா மற்றும் கொழும்பிற்கு அடுத்தபடியாக குருணாகல் மாவட்டத்தில் அதிகளவானமக்கள்வாழ்கின்றனர். இந்த மாகாணத்தை திட்டமிட்ட அடிப்படையில் அபிவிருத்தி செய்வதே எமது நோக்கமாகும். எனவே, பிங்கிரிய பிரதேசத்தில் வர்த்தக வலயமொன்றை உருவாக்குவதற்காக 1000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை இரணவில சுற்றுலா வலயத்துடன் இணைக்கஎதிர்பார்த்திருக்கிறோம்.

அப்போது இந்த பிங்கிரிய, மாதம்பே பகுதிகள் பெரும் முன்னேற்றம் அடையும். மேலும், குளியாபிட்டியவில் தொழில்துறை வளர்ச்சிக்கான திட்டமும்செயற்படுத்தப்படவுள்ளது. மேலும்விவசாயநவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் விரிவான திட்டமொன்று குருணாகல் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது உதவித்தொகை கிடைக்கவுள்ளதால், அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏனைய வீதி நிர்மாண பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலும் இந்த மாகாணத்திற்கு புதிய பல்கலைக்கழகம் ஒன்றும் கிடைக்கும். இதனால் அடுத்த சில வருடங்களில் குருணாகல் பெரும் அபிவிருத்தி அடையும் என்றார்.

## பெருந்தோட்டத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பில் தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதைத் தடுத்து உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்தது.

இது தோட்ட தொழிலாளர்களை ஏமாற்றம்செயற்பாடகவே உள்ளது. தோட்டத்தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வினை வழங்க வேண்டும். அதற்றாக நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்றார்.

## இடையீட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவினைத்தாக்கல்செய்துள்ளனர்.

இந்தமனுக்களில்,அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூன்றாம் பிரிவின் ஊடாக அரசியலமைப்பின் 30.2பிரிவு திருத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளதோடு தாற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் நிறைவுக்கு வருகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேட்பாளரை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை களமிறக்குவோம். அதற்கு தற்போது அவசரப்பட வேண்டியதில்லை. நாம் கட்சியில் உரையாடி அதற்கான தீர்மானத்தினை எடுப்போம்.

அந்தத் தீர்மானத்தினை பொருத்தமான காலத்தில் நாம் அறிவிப்போம். அவசரப்பட வேண்டாம் என்றார்.

## உரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாயக்க தேரரைச் சந்தித்து நலன் விசாரித்ததுடன், சிறு கலந்துரையாடிலும் ஈடுபட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன்மறுசீரமைப்புசெயல்முறை தொடர்பாக நாங்கள் இப்போது தனியார்கடன்வழங்குநர்கள்மற்றும் வர்த்தக கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடலைமுடித்துள்ளோம். நாங்கள்செலுத்தவேண்டியகடனில் இருந்து சுமார் 08 பில்லியன் டொலர்களைகுறைக்கமுடிந்துள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, கடனை செலுத்துவதற்கு 04 வருட கால அவகாசம் மற்றும் கடனை முழுமையாக செலுத்த 2043 வரை கால அவகாசம் பெறவும் முடிந்துள்ளது. இந்த நலன்களைப் பயன்படுத்தி இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கின்றோம். அதற்காக, அடுத்த இரண்டு வருடங்களில் திட்டமிட்ட வகையில் செயற்பட்டால் மீண்டும் கடன் பெறாத நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்ல முடியும்.

பௌத்த நாடான தாய்லாந்து இன்று திறந்த பொருளாதாரத்தின் ஊடாகவலுவானபொருளாதாரத்தை உருவாக்கியுள்ளது. 1950 இல் தாய்லாந்து இலங்கையை விட இரண்டு மடங்கு கடனில் இருந்தது. ஆனால் இன்று, ஏற்றுமதியின் அடிப்படையில் சாதகமான பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

1991ஆம்ஆண்டு, வியட்நாமின் அன்றையகைத்தொழில்அமைச்சர் இலங்கைக்கு கைத்தொழில்களையும் முதலீடுகளையும் கொண்டுவருவது பற்றி என்னிடம் கேட்டார். இன்று நான், கைத்தொழில்களையும் முதலீடுகளையும்கொண்டுவருவது தொடர்பாக வியட்நாமின் கைத்தொழில் அமைச்சரிடம் கேட்க வேண்டியுள்ளது.

உரிய திகதியில் தேர்தலை நடத்த வேண்டும் என்று தேர்தல்கள்ஆணையாளரிடம்தெரிவித்துள்ளேன். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 06 வருடங்களில் இருந்து 05 வருடங்களாக குறைக்க நான் தான் பரிந்துரைத்தேன். இன்று இந்நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அதன் படி தற்போது அஸ்வெசும வேலைத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவாரணம்வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

## பேச்சு நடத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பதற்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் இணக்கம் தெரிவித்திருக்கிறார் எனவும் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகபிரஸ்தாபிக்கப்பட்டபோது, இந்திய கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடு காரணமாக பாதிக்கப்படும் தங்களுடைய வாழ்வாதாரம் தொடர்பாக போதிய கரிசனை வெளிப்படுத்தப்படுவதில்லை என்ற ஆதங்கத்தினை வெளிப்படுத்திய கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்த போது கூட தமிழ் மக்களின் பிரதிநிதிகளினால் கடற்றொழிலாளர் விவகாரம் பேசப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையிலேயே தனக்கும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில் கடற்றொழிலாளர் விவகாரம் விரிவாக பேசப்பட்டமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் காணப்படும் போதைப் பொருள் பரவல் மற்றும் சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்தல், வீதி விபத்துக்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புக்கள் போன்றவை தொடர்பாக நேற்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

உள்ளூராட்சிமன்றங்கள்மற்றும் மாகாண திணைக்களங்களினால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்களை ஆராய்ந்து சரியானவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

சட்டத்துக்குமுரணானவகையில் சுண்ணக்கல் அகழப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் முன்வைக்கப்பட்ட குற்றசாட்டுக்களில் உண்மை இல்லைஎன்பதைகளப்பயணங்கள் மூலம் உறுதிப்படுத்தியதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுண்ணக்கல்அகழ்வு என்பது ஆயிரக்கணக்கானோரின் வாழ்வாதாரமாக இருக்கின்ற நிலையில், உரிய நியமங்களின் அடிப்படையில் சுண்ணக்கல் அகழ்வினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அகழப்படுகின்ற சுண்ணக்கல், வர்த்தகநோக்கோடுவெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற பட்சத்தில் அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களைவிநியோகிப்பதற்கான பொறிமுறையை, சட்ட ஏற்பாடுகளை விரிவாக ஆராய்ந்து, அதற்கேற்ப உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றஉறுப்பினர்கள், யாழ். மாவட்ட பதில் செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாகாண திணைக்களங்களின் பிரதானிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரண, தளபாட வழங்கல்கள்



(பாறுக் ஷிஹான்)

பிஎஸ்.எஸ்.பி. திட்டத்தின்கீழ்கல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள ஆதார வைத்தியசாலைகள் உள்ளிட்ட அவசர தேவைகள் உள்ள பிரதேச வைத்தியசாலைகள் சிலவற்றுக்கும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை உரிய வைத்தியசாலைகளுக்கு கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் ஆகிய ஆதார வைத்தியசாலைகள் மற்றும்பனங்காடுஒலுவில்,அன்னமலை,இறக்காமம் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கும் குறித்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிராந்திய பிரிவு தலைவர்கள், சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (05)





# கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் பருத்தித்துறையில் பொலிஸால் மீட்பு

03ஆம்திகதி புதன்கிழமை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பருத்தித்துறை - புலோலி காட்டுப் பகுதியில் மறைத்து வைத்திருந்த போதைப்பொருள்கள் ஒருதொகை மீட்கப்பட்டன.

இதன்போது ஒரு கிலோ எடையுடைய கேரளக் கஞ்சா, 290 போதை மத்திரைகள் மற்றும் தராசு ஒன்று என்பன மீட்கப்பட்டன.

இருப்பினும் சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை. பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் புதிய வடிவத்தில் முன்னெடுப்பு

யுக்தியசுற்றிவளைப்புகள்தருமபுரம் பொலிஸ் பிரிவில் உள்ள கல்லாறு பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையில் பொலிஸார் இராணுவத்தினர் சிறப்பு அதிரடிபடையினர் இணைந்துமேற்கொண்டனர்.

இதன்போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையபலசந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட அனைவரும் பொலிஸ் விசாரனைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ப்பட்டனர்

(050- 113)

# காரில் தப்பிச்சென்றோர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

பொலிஸ் உத்தரவை மீறி காரில் தப்பிச் சென்ற போதைப்பொருள் கடத்தல்காரர் மீது அத்துருகிரிய பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரைக்கைதுசெய்வதற்காகபொலிஸ் அதிகாரிகள் சிலர் வியாழக்கிழமை இரவு பிலியந்தலை பிரதேசத்திற்கு முச்சக்கரவண்டியில் சென்றுள்ளனர்.

இதன்போது, காரில் போதைப் பொருட்களை கடத்திச்சென்ற போதைப் பொருள் கடத்தல்காரரை கைது செய்ய முயன்ற போது சந்தேக நபர் பொலிஸ் அதிகாரிகள் பயணித்த முச்சக்கரவண்டியை மோதி விபத்துக்குள்ளாகி தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

இதன்போது, பொலிஸ் அதிகாரிகள் சந்தேக நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதோடு சந்தேக நபரின் காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

சந்தேக நபர் காயத்துடன் காரில் தப்பிச் சென்று வைத்தியசாலைக்குச் சென்ற போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)

# திடீர் சுற்றிவளைப்புக்களில் குடத்தனையில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 06 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸார் குடத்தனை பகுதியில் வியாழக்கிழமை சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன் போது , வாள் வெட்டு சம்பவம் , கசிப்பு உற்பத்தி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 06 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(05)

# சவுக்கு மரங்கள் வெட்டிய குற்றத்தில் மூவர் கைது

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் சவுக்கு மரங்கள் வெட்டிய குற்றச்சாட்டில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணற்காட்டு பகுதியில் சவுக்கு மரங்கள் பெருந்தொகையாக வெட்டப்படுவதாக வனவள பாதுகாப்புதிணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் மூவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான வெட்டப்பட்ட சவுக்கு மரங்களை மீட்டுள்ளதுடன் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தநடவடிக்கைஎடுத்துள்ளனர். (05)

# வவுனியாவில் ஆசிரியருக்கு மிரட்டல்: கைதான கிராம அலுவலருக்கு பிணை

வவுனியாவில்ஆசிரியர்ஒருவருக்கு போலிமுகநூலில்அவதூறைஏற்படுத்தி தொலைபேசியில் மிரட்டல் விடுத்த கிராம அலுவலர் ஒருவர் கைதாகி நீதிமன்றத்தால் வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவடக்குகல்விவலயத்தைச் சேர்ந்த தரணிக்குளம் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கிராம அலுவலரின் ஆதரவுடன் இடம்பெற்ற காடழிப்புதொடர்பில்கிராமஅபிவிருத்தி சங்கம்ஊடாகவெளிப்படுத்தியமையால் குறித்த ஆசிரியருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் போலி முகநூலில் அவ் ஆசிரியர் தொடர்பாக தவறான தகவல்கள் பகிரப்பட்டதுடன், தொலைபேசியிலும் ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட குறித்த ஆசிரியர் ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, ஒம்புட்ஸ்மன், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் என பலரிடமும் முறையிட்டதுடன், குறித்த சம்பவம் தொடர்பில கணனி பயன்பாட்டு கட்டுப்பாட்டு பிரிவு பொலிசாருக்கும் முறைபாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த பொலிசார் குறித்த முகநூல் கிராம அலுவலருடையது என்பதை கண்டறிந்ததுடன் அதனை முடக்கியிருந்தனர். இந்நிலையில் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவுபொலிஸாரால்தொலைபேசியில் அச்சுறுத்தியமை மற்றும் போலி முகநூலில்அவதூறைஏற்படுத்தியமை தொடர்பில்கிராமஅலுவலருக்குஎதிராக வவுனியாநீதிமன்றில்வழக்குதாக்கல் செய்யப்பட்டது.

நேற்றையதினம் வழக்கு விசாரணை இடம்பெற்ற போது மன்றின்கட்டளைக்குஅமையநீதிமன்ற சிறையில்அடைக்கப்பட்டகிராமஅலுவலர் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதி யானசரீரபிணையில்விடுவிக்கப்பட்டார். அத்துடன் வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதிக்குஒத்திவைக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# புதுக்குடியிருப்பில் 'யுக்திய' ஏற்பாடு

## 7 பேர் கைது

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நடத்திய 'யுக்திய' சுற்றிவளைப்பில் பல குற்றங்களுடன் தொடர்புபட்ட 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 9 ஆம், 10 ஆம் வட்டார பகுதிகளில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையிலான பொலிஸார், இராணுவத்துடன் இணைந்து நேற்று(வியாழக்கிழமை)அதிகாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது திறந்த பிடியாணை நபர்கள் இருவர், பொலிஸாரால் ஒருநாள் பிணையில் விடுவிக்கப்பட்ட 3 பேர், திருகோணமலையை சேர்ந்த பல குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் என 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்களிடமிருந்து 43 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று (வியாழக்கிழமை) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.(05)

# நெதர்லாந்திலிருந்து 35 நாய்கள் வந்தன





பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவுக்கு நெதர்லாந்திலிருந்து 35 நாய்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த நாய்கள் நெதர்லாந்திலிருந்து நேற்று அதிகாலை 02.05 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்த நாய்கள் கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிறுவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

நாய்களின் மொத்த மதிப்பு 50 கோடியே 80 லட்சம் ரூபா ஆகும். இந்தநாய்களில்21பெண்நாய்களும் 14 ஆண் நாய்களும் உள்ளன.

இந்த நாய்களை ஏற்றுக்கொள்வதற்காகபொலிஸ்ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர்நிஹால் தல்துவகட்டுநாயக்கவிமானநிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிறுவனத்திற்கு வருகை தந்தார்.

இந்த நாய்கள் விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள கால்நடை வைத்திய அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்ட பின்னர், நாய்களின் பயிற்சியாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.07.2024இல் வெளியிடப்பெற்றது